**செய்தி வெளியீடு எண்: 588** **நாள்:14.08.2020**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் இன்று (14.8.2020) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கீழ் செயல்படும், நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநரகத்தில் காலியாக உள்ள 505 நில அளவர் மற்றும் 20 இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 4 நில அளவர் மற்றும் 1 இளநிலை உதவியாளர் ஆகியோருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரகம் 150 ஆண்டுகளை கடந்த தமிழ்நாடு அரசின் மிகவும் பழமையான துறைகளில் ஒன்றாகும். இத்துறையானது, நிலஅளவைப் பிரிவுகள், நிலஅளவை குறியீடு, நிலஆவணங்கள் பராமரித்தல், நிலஉரிமை மற்றும் பின்னர் அதில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவற்றை உரிய பதிவேடுகளில் பதிவு செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த நிலஅளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநரகத்தில் பணிகள் தொய்வின்றி சீரிய முறையில் தொடர்ந்திட இத்துறையில் ஏற்படும் காலிப் பணியிடங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசால் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், நிலஅளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநரகத்தில் காலியாக உள்ள 505 நில அளவர் மற்றும் 20 இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 4 நில அளவர் மற்றும் 1 இளநிலை உதவியாளர் ஆகியோருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் டாக்டர் இரா. செல்வராஜ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**